# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 8

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அஜய் |
| Father's Name | : | Poovazhagan |
| Village | : | Vettoornimadam |
| Taluk | : | Agasteeswaram |
| Caste | : | Nadar |
| Calling | : | Unemployed |
| Religion | : | Hindu |
| Age | : | 21 |
| Date | : | 12.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2024

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். )

<u>12.06.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது வெட்டூர்ணிமடம் பரமார்த்தலிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பாலிடெக்னிக் முடித்து விட்டு வேலை தேடி வருகிறேன். இறந்து போன மனோஜ் எனது நண்பர். ஆஜர் எதிரியை தெரியும். தெப்பகுளத்தில் வைத்து பார்த்துள்ளேன். 2022 தீபாவளி சமயத்தில் பேச்சி முத்துவிற்கும், மனோஜிற்கும் சண்டை இருந்தது. பேச்சிமுத்துவை குடிக்க கூடாது என மனோஜ் சொன்னதால் சண்டை ஏற்பட்டது. கூட இருந்தவர்கள் விலக்கி விட்டார்கள். 25.08.2023 அன்று மாலை 5.00,

5.15 மணியளவில் மனோஜ் யும் அரவிந்தும் சேர்ந்து SSD பாத்திரக் கடை முன்னால் டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். பேச்சி முத்து மனோஜை பார்த்து இன்னொரு முறை இங்கே பார்த்தால் வெட்டி கொலை செய்து விடுவேன் என்று சொன்னதாக மனோஜ் என்னிடம் சொன்னான். 28.08.2023 அன்று இரவு 8.30 மணியளவில் டீ குடிப்பதற்காக கிருஷ்ணன் கோவில் SSD பாத்திரக் கடை அருகே உள்ள டீக்கடைக்கு வந்து கொண்டிருந்தேன். கிருஷ்ணன் கோவில் தென்மேற்கு சந்தில் தெப்பகுளத்தில் மனோஜ் தெருவில் மயக்க நிலையில் இருந்தான். அங்கே அவனுடைய அண்ணன் ராஜகோபால், அரவிந்த், கிஷோர் மற்றும் பக்கத்தில் இருந்தவர்கள் இருந்தார்கள். நான் அப்போது Suzuki TN 72 V 9057 என்ற பைக்கில் போய் கொண்டிருந்தேன். பக்கத்தில் ஆட்டோ எதுவும் இல்லை ராஜகோபால் அண்ணன் பேச்சி ஸ்கூரு டிரைவரை வைத்து குத்தி விட்டான் என்று சொல்லி பக்கத்தில் எதாவது ஆஸ்பத்திரி கூட்டி செல்லலாம் என சொன்னார். மனோஜ்ஜை வண்டியில் ஏற்றிக் கொண்டு ராஜ கோபாலும் வந்தார். வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேனாம். அங்கே ICU வில் சேர்த்து 5 நிமிடத்தில் மனோஜ் இறந்துவிட்டதாக சொன்னார். மனோஜ் ஐ மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது மழை பெய்து கொண்டிருந்தது மனோஜ் ஐ வண்டியில் ஏற்றும்போது தரையில் உரசி அவனுடைய இரண்டு காலிலும் காயம் ஏற்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>-

தெப்ப குளத்தை சுற்றி Paver Block போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 72 V 9057 என்ற எண் கொண்ட வண்டியின் உரிமையாளர் யார் என்றால் நான்தான். நான்தான் அதன் உரிமையாளர் என காட்டுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் ஆவணம் உள்ளது. அவ்வாறு எந்த ஆவணமும் போலீசார் விசாரிக்கும்போது நான் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் என்னிடம் வண்டி பற்றி எதுவும் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை. என்னிடம் போலீசார் விசாரிக்கும்போது

Suzuki வண்டி என்றோ, வண்டி எண்ணையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னேன். கிருஷ்ணன் கோவில் பக்கத்தில் ஆட்டோ ஸ்டாண்ட், டேக்கி ஸ்டாண்ட் ஆகியவை உள்ளது என்றால் ஒரு கிலோ மீட்டர் தள்ளிதான் உள்ளது. அதுவும் இரவு நேரத்தில் வண்டிகள் எதுவும் இருக்காது. அங்கு கிருஷ்ணன்கோவில் அருகில் ஆட்டோ ஸ்டாண்ட், டேக்கி ஸ்டாண்ட் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரவு 12 மணிவரையில் அங்கு டேக்சி மற்றும் ஆட்டோ இருக்கும் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் எதுவும் இல்லை. வடசேரி காவல் நிலையம் அருகே திருவனந்தபுரம் நாகர்கோவில் ரோட்டில் டேக்சி, ஆட்டோ எப்போதும் இருக்கும் என்றால் சரியல்ல. எப்போதும் இருக்காது. நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வடசேரி பஸ் நிலையம் சுற்றி ஆட்டோ மற்றும் டேக்சி ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பஸ் ஸ்டாண்ட் அங்கிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காவல் நிலையத்திலிருந்து பஸ் ஸ்டாண்ட் அரை கிலோ மீட்டர் தொலைவு கூட இருக்காது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வடசேரி காவல் நிலையத்திலிருந்து கிழக்கு பக்கம் J.K. ஆஸ்பத்திரி என்ற Multi Speciality மருத்துவமனை உள்ளது என்றால் J.K. மருத்துவமனை உள்ளது. ஆனால் அது Multi Speciality மருத்துவமனை கிடையாது. அதே போல கெவின் மருத்துவமனை, வில்லியம் மருத்துவமனை ஆகியவை உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவை Multi Speciality கிடையாது. அவை அனைத்தும் Multi Speciality மருத்துவமனை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன மனோஜ் ஐ நான் பைக்கில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தால் என்னுடைய உடலில் ரத்தம் பட்டிருக்கும் என்றால் சரிதான். பைக்கிலும் ரத்தம் பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மழை பெய்து கொண்டிருந்தது அதில் இரத்தம் போயிருக்கும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே நான் மனோஜ் கூட்டி சென்றிருந்தால் உடையிலும், பைக்கிலும்

ரத்தம்பட்டிருக்கும் என்றாலும் அதை போலீசார் கைப்பற்றியிருப்பார் என்றாலும் நான் அவ்வாறு கூட்டி செல்லாததால் தான் போலீசார் அவற்றை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் என்னிடம் அது குறித்து கேட்கவில்லை. இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் எந்த வாகனமும் கிடையாது என்றாலும் எனக்கு எந்த வண்டியும் ஓட்ட தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னநேரத்தில், சொன்ன விதத்தில் இறந்து போன மனோஜையோ அ.சா. 1 ராஜ கோபாலையோ எந்த மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இறந்து போன நபருக்கும் இடையே முன் விரோதம் இருந்ததாக எந்த சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எதிரிக்கும் மனோஜ் க்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அ.சா. 1 ராஜ கோபால் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி என்றால் சரியல்ல.